**லுனுகம்வெஹெர பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 10 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து லுனுகம்வெஹெர பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 04 கணக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டு ஆரம்ப மீதிக்கும் முன்னைய ஆண்டின் இறுதி மீதியும் இடையே ரூபா 7,247,622 இற்கான குறைவு / மிகை காணப்பட்டது. | ஆரம்ப மீதி சரியாக முன்கொண்டு செல்லப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | கடந்த ஆண்டுகளின் போது வாடகைக்கு கொடுத்திருந்த 04 கடையறைகள் தொடர்பாக பெற வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 770,000 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஒரே தடவையில் பெறும் பணம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | இந்த நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்து அறிவிக்கின்றேன். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 530,471 தொகையான ஏனைய கடன்பட்டோர் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ஊழியர் பிணை வைப்பு ரூபா 196,192 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஊழியர் பிணை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (v) | மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 71,718 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முத்திரைக் கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 6,998,021 தொகைக்கான 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதியை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்பிக்கப்பட வேண்டும். | பதிவேடுகள் சரியாக நாளதுவரை ஆக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு சரியான பதிவேடுகள் உட்படுத்தப்பட்டிருக்காததுடன், 2019 பண்டக்கணிப்பீட்டின் மூலம் கூடிய அளவு தூரம் சரி செய்யப்பட்டதுடன் 2020 ஆண்டு முதல் முறைப்படி பேணப்படும் என அறிவிக்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) | | | |
| விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அடுத்த வருடம் மிகைகள் மற்றும் பற்றாக்குறை கூற்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | (i) நி.பி. 571 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 401,825 இற்கான வைப்புத் தொகை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | 02 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக் களை வருமானத்திற்கு எடுப்பதற்கும் இரண்டு வருடங்களை மிகைக்காத வைப்பு க்களை எதிர்காலத்தில் விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |
| | (ii) நி.பி. 1645(அ) மற்றும் 1646(இ) | 10 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | பதவியணி வெற்றிடங்கள் காரணமாக ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதுடன் எதிர்காலத்தில் குறைபாடுகள் ஏற்படாதிருக்க பொறுப்பாக இருப்பேன். |
| (இ) | 2018 ஜனவரி 24 திகதிய மற்றும் 02/2018 பொது நிருவாக சுற்றறிக்கை | ஒட்டுமொத்த பதவிகளுக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் மற்றும் மனிதவள திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மனித வள திட்டமொன்று தயாரிப்பதற்கு முயற்சித்த போதிலும் சரியான அனுபவம் அல்லது அறிவொன்று பதவியணியினருக்கு காணப்படாமையும் இது வரை அது தொடர்பான பயிற்சியொன்றும் வழங்கப்படாமையும் மற்றும் தெளிவான அறிவுறைகள் கிடைத்திருக்கவில்லை என அறிவிக்கின்றேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 229,620 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 542,256 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 330,000 | 309,920 | 311,720 | 1,300 | 351,000 | 407,739 | 412,239 | 2,500 |
| வாடகை | 3,885,500 | 3,287,184 | 3,070,984 | 229,100 | 4,332,000 | 3,137,025 | 3,139,550 | 120,900 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 575,100 | 769,260 | 531,760 | 2,100 | 505,100 | 1,596,200 | 1,565,000 | 55,200 |
| ஏனைய வரு மானங்கள் | 3,254,850 | 3,081,530 | 3,229,942 | 2,509,298 | 2,424,000 | 1,763,183 | 1,348,596 | 1,007,922 |
| மொத்தம் | 8,045,450 | 7,447,894 | 7,144,406 | 2,741,798 | 7,612,100 | 6,904,147 | 6,465,385 | 1,186,522 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) பிரகாரம் இனங்காணப்பட்ட முன்னேற்றப்பட்ட பிரதேசங்களுக்காக வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். | விரைவாக ஆதன அட்டவணை தயாரிக்கப்பட்டு பிரதான பெறுமதி மதிப்பீட்டாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 28 கடைகளிலிருந்து பெற வேண்டிய கடையறை வாடகை மற்றும் தாமதக் கட்டணம் முறையே ரூபா 229,100 தொகை மற்றும் ரூபா 22,910 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் செயற்படுவதற்காக பொது கூட்டத்திற்கு தகவல்கள் சமர்பிக்கப்பட்டு, தொடர் நடவடிக்கை மேற்கொள்வேன் என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடையறை வாடகை தொடர்பாக பெறுமதி மதிப்பீட்டு எதிர்ப்பொன்றின் பின்னர் பெற்றுக்கொண்ட பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பெறுமதி மதிப்பீடு மீது கடை வாடகை அறவீடு செய்வதற்கு பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 142(5) படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறிப்பிட்ட புதிய பெறுமதி மதிப்பீடு 2019 செப்தம்பர் 01 திகதி முதல் செயற்படுத்துவதற்கு சபையின் ஏகோபித்த அங்கீகாரம் கிடைத்திருந்தமையால் அத்தீர்மானத்தின் படி கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | லுனுகம்வெகர புதிய நகரக் கடைகள் ரூபா 2,000 வீதம் 2015 செப்தம்பர் 21 திகதி பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் முதலமைச்சரின் இணக்கத்தின் மீதி மாதாந்தக் கடை வாடகை ரூபா 1,000 என மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதம் வரையும் அறவிடப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2015 முதல் 2018 ஆண்டு வரை மாதாந்த கடை வாடகை ரூபா 1,000 இனை அறவீடு செய்வதற்கு முதலமைச்சர் அங்கீகரித்திருந்ததுடன், மீளாய்வாண்டு ஆகஸ்ட் மாதம் வரை ரூபா 1,000 வீதம் மாதந்த வாடகை அறவிடப்பட்டிருந்தது என அறிவிக்கின்றேன். |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள வியாபார அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய வர்த்தக நிலையங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்காததுடன் 2017 ஆம் ஆண்டிற்கான கணிப்பீடு அடிப்படையில் மீளாய்வாண்டின் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. | வர்த்தக நிலையங்களை இனங்காண்பதற்கு கணிப்பீடு மேற்கொள்ளல் மற்றும் நிலுவை வருமானத்தை அறவீடு செய்யப்பட வேண்டும். | கடந்த மற்றும் மீளாய்வாண்டுகளின் வருமான பரிசோதனை உத்தியோகத்தர் ஒருவர் இருக்காததுடன் 2020 ஆண்டிற்காக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் பிரகாரம் இந்த ஆண்டில் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 102,507 தொகை மற்றும் ரூபா 643,000 தொகை ஆகக் காணப்பட்டது. மேலும் பெறவேண்டிய முத்திரைக் கட்டண மீதியில் 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 458,500 தொகையாகும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை முத்திரைக் கட்டணத்தில் ரூபா 619,500 தொகை கிடைத்திருந்தது எனவும் நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் முற்றாக கிடைத்திருந்தன என அறிவிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 30 பிரதான விடயங்கள் நிறைவேற்று வதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி அளவில் 28 விடயங்களுக்கு மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தது. | துணை விதிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 28 விடயங்களில் துணை விதிகளைத் தழுவியுள்ளேன் என அறிவிக்கின்றேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவை செய்வதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளக்க வேண்டும். | நிருவனம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கெல்லை தொடர்பாக 05 விடயங்களை இனங்கண்டிருந்ததுடன் 2020 பாதீட்டின் மூலம் அந்த சுட்டிகளை இனங்காணல் மற்றும் இலக்குகளின் முன்னேற்றத்தை அளவை செய்யும் நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப்பட்டுள்ளது. |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தின் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அறிவித்தல் பலகைகள் தொடர்பாக கணக்கீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2017 ஆண்டிற்கான கணிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | அறிவித்தல் பலகை கணிப்பீடு வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். | வருமானப் பரிசோதகர் ஒருவர் இருக்காமையால் கணிப்பீடு மேற்கொள்ள முடியாமல் போனதெனவும் மற்றும் 2020 ஆண்டிற்கான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதென அறிவிக்கின்றேன். |
| (ஆ) பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 152(2) இன் படி சபையின் அதிகாரப் பிரதேசத்தின் காணப்படும் வைத்தியர்கள், நொத்தாரிஸ்கள் மற்றும் பதிவாளர்கள் போன்ற திறன்தொழில்களில் இருந்து கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் பெற வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | வருமானப் பரிசோதகர் ஒருவர் இன்மையால் திறன்தொழில் செய்வோர் தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்படாததுடன் 2020 ஆண்டின் போது அதனை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன. |
| (இ) பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 150 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கைத்தொழில் வரி அறவீடு செய்வதற்கு சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில்கள் தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2017 ஆண்டின் கணிப்பீட்டின் அடிப்படையில் வரி அறவிடப்பட்டமையால் புதிதாக நிருவப்பட்ட கைத்தொழில்களில் இருந்து வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் பெற வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | முன்னைய மற்றும் மீளாய்வாண்டுகளில் வருமான பரிசோதகர் ஒருவர் காணப்படாமையால் 2017 ஆண்டு கணிப்பீட்டை அடிப்படையாக கொண்டதுடன், 2020 ஆண்டிற்காக கைத்தொழில் வரிக்காக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 1993 ஜுன் 24 திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்கங் கொண்ட தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி பெற்றுக்கொள்ளவேண்டிய சுற்றாடல் தாக்கத்தினை பெறுமதி மதிப்பீடு செய்யும் அறிக்கை பெற்றிருக்காத 16 வர்த்தக நிலையங்களுக்காக மீளாய்வாண்டின் போதும் வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் தாக்கத்தை பெறுமதி மதிப்பீடு செய்யும் அறிக்கை பெற்றிருந்த 24 வர்த்தக நிலையங்கள் தொடர்பாக அந்த நிறுவனங்களுக்கு வர்த்தக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக ஊக்குவிப்பதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | புதிய பெண் விடய உத்தியோகத்தர் ஒருவர் இருந்தமையாலும், நிறுவனத்தின் உத்தியோகத் தர்களுக்கு இது தொடர்பான அறிவொன்று காணப்படாமையினாலும் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன எனவும் இவ்வருடத்தில் குறைபாடுகள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 08 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 04 மிகைப் பதவியணி முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகைப் பதவிகளை முறைப்படுத்துதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடப் பதவியணியில் 04 நிரப்பப்பட்டதுடன் மேலும் ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்காக அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மீதியான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும், மற்றும் மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பேன் எனவும் 25/2014 சுற்றறிக்கையின் மூலம் 04 பதவிகள் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

**(ஆ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ள உத்தியோகத்தர் 04 பேரிடம் பெறவேண்டிய ரூபா 75,416 தொகையினை பிணையாளர்களிடம் மற்றும் ஓய்வூதியத்திலிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை ஊளியர் கடனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற வேண்டிய கடன் மீதியில் ரூபா 10,000 அறவிடப் பட்டதுடன், ரூபா 36,966 தொகை பதிவழிப்பதற்கும் மீதியான இருவரின் கடன் மீதிகளை ஓய்வூதியத்திலிருந்து அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் 22 அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூபா 22,000,000 இற்கான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. | பாதீடு செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்த வேண்டும். | செயற்திட்டங்களை செயற் படுத்துவதற்காக மத்திய அரசு மற்றும் மாகாண சபை நிதி ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் உழைக்கப்பட்ட வருமானம் அபிவிருத்தி அலுவல்களுக்கு செலவீடு செய்வதற்கு போதியளவாக காணப்படாமையால் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முடியாமல் போனதென அறிவிக்கின்றேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபையினால் அனுபவித்து வந்த 07 காணிகள், 20 மயானங்கள், 24 சனசமூக நிலையக் காணிகள் 10 கட்டடங்கள் மற்றும் 04 வாகனங்களின் உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணிகள் மற்றும் கட்டடங்களை உரித்தாக்குவதற்காக காணி ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளதுடன் அவற்றின் அளவை விடயங்களுக்காக நிதி போதியளவு காணப் படாமையாலும் கட்டண அறவீடு ஒன்று மேற்கொள்ளப்படாமல் 04 மயானங்களை அளவை செய்வதற்காக இணங்கியிருந்ததுடன் மீதியான |

| | | |
|---|---|---|
| | | காணிப்பகுதிகளை சகாய கட்டண அடிப்படையில் அளவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், 02 வாகனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்ததுடன், ஒரு வாகனம் லீஸிங் முறையில் பெற்றிருந்தென அறிவிக்கின்றேன். |

### 3.5.2 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த பெரலிகெல வாராந்த சந்தை 2020 ஜனவரி 22 திகதி வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | சபைக்குச் சொந்தமான காணிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வாராந்த சந்தையில் மின்சாரம், நீர் மற்றும் பாதுகாப்பு வேலி காணப்படாமலும் சந்தை வளவு முறைப்பிரகாரம் தயாரித்திருக்காததுடன் குறிப்பிட்ட குறைபாடுகளை பூர்த்தி செய்து வாராந்த சந்தையின் அலுவல்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 3.5.3 வருடாந்த பண்டக் கணிப்பீடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆண்டிற்கான நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டு அறிக்கையின் மூலம் பரிந்துரைக்கப்பட்டிருந்த வீரவில சந்தையை புனர்நிர்மாணம் செய்து வாராந்த சந்தை நடாத்துவதற்காக ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டுச் சபையின் பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டும். | நீர், மின்சாரம் தொடர்புகள் இன்மை அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து சந்தையை புனர்நிர்மாணம் செய்து நடாத்துவதற்கு சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் 2020 ஆண்டின் சந்தையின் அபிவிருத்திக்காக ரூபா 200,000 நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முன்னைய ஆண்டின் கணிப்பீட்டின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு ஏலவிற்பனை செய்யப்பட்ட 07 பண்ட வகைகள் தொடர்பாக 32 அலகுகள் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகள் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருட் கணிப்பீடு மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணுவதற்காக 03 உத்தியோகத்தர்களுக்கு சாட்டப்பட்டிருந்ததுடன் அவ்விடயம் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் இது வரை 01 உத்தியோகத்தருக்கு சாட்டப்பட்டு முறைப்பிரகாரம் நடாத்தப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |